**செ.கு.எண் :08** **நாள் :15.01.2022**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

பத்திரிகைத் துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தி இந்து, ஃபரண்ட்லைன், பி.டி.ஐ., உள்ளிட்ட பல்வேறு முன்னனி செய்தி நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மூத்த பத்திரிகையாளர் மற்றும் பல்வேறு பத்திரிகையாளர்கள் அமைப்புகளில் முக்கிய பொறுப்புகளை வகித்த திரு.எஸ்.துரைராஜ் அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக இன்று (15.01.2022) இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**